## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

#### (அ) மாகாண சபை நிதியக் கணக்கு

மீளாய்வாண்டிற்குரிய மாகாண சபை நிதியக் கணக்கு 2010 யூன் 24 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டு தொடர்பாக 2010 யூன் 30 ஆம் திகதி மாகாணசபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் வருமாறு.

**2009 ஆம் ஆண்டிற்கு உரித்தானவை**

| | கணக்குகள் | மொத்த கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை | முன்னைய ஆண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிராத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 28 | 28 | - | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | 01 | - | - |
| (iii) | மாகாணசபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்குகள் | 25 | 23 | 02 | 01 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 06 | 06 | - | - |
| (vi) | நிதியக் கணக்குகள் | 03 | 02 | 01 | - |
| (vii) | நியதிச் சட்டக் கணக்குகள் | 02 | 01 | 01 | - |
| | | 65 | 61 | 04 | 01 |

## 1.2. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, சப்ரகமுவ மாகாண சபை 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சப்ரகமுவ மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலை மற்றம் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கும் அமைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் / கொடுக்கல் வாங்கல் செயற்பாடு மற்றும் செயலாற்றல் தொடர்பான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | வருமானம் | | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா | | ரூபா |
| (அ) கணக்குகளில் அதிகரித்துக் காட்டுதல் | 02 | 94,139,238 | 16 | 1,282,429 | 15 | 7,536,347 |
| (ஆ) கணக்குகளில் குறைத்துக் காட்டுதல் | | | 27 | 33,267,092 | | |
| மொத்தம் | 02 | 94,139,238 | 16 | 1,282,429 | 15 | 7,536,347 |

**1.3.2 இணக்கம்செய்யப்படாத கணக்குகள்**

06 கணக்கு விடயங்களுக்கு உரித்தான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 41,172,249 ஆனதுடன் பயன்பாட்டுப் பதிவேடுகளின்/அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45,233,065 ஆகும்.

**1.3.3 வங்கிக் கணக்கிணக்கம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வழங்கப்பட்டு 6 மாதங்கள் கடந்த ஆனால் கொடுப்பனவிற்காக சமர்பிக்கப்பட்டிராத ரூபா 42,045,800 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் வங்கியல் விசாரணை செய்து பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 2,505,134 பெறுமதியான 29 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 07 வங்கிக் கணக்குகளுக்குரிய இனங்காணப்படாத வரவு ரூபா 142,390 ஆனதுடன் 12 வங்கிக் கணக்குகளிற்குரிய இனங்காணப்படாத செலவு ரூபா 2,484,872 தொகையும் காணப்பட்டது.

**1.3.4 கட்டுநிதிக் கணக்குகள்**

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த ரூபா 19,973,528 கட்டுநிதி வரவு மீதியும் ரூபா 3,770,033 செலவு மீதியும் காணப்பட்டன.

**1.3.5 பொது வைப்புக் கணக்குகள்**

நிதிப் பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது 2009

திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டு காலத்திற்கு மேல் காணப்பட்ட பொது வைப்புக்களின் பெறுமதி ரூபா 26,260,358 ஆகும்.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

**(அ) பதில் பெறப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 58 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐய வினாக்களில் உள்ளடக்கப்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 21,011,441 ஆக இருந்தது.

**(ஆ) தகவல்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராமை**

அவசியமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 404,473 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

### 1.3.7 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமான ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | கூட்டுறவு சேவை ஆணைக்குழுவினால் அவசியமான விதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2008 இன் 09 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தல்) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஔவை ஆம் அத்தியாயத்தின் 153(1) ஆம் பிரிவு | ரூபா 182,388 கூட்டுத்தொகையான வரித் தொகை கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1893 இன் 08 ஆம் இலக்க ஈட்டு அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு | 02 அடகு நிலையங்களினால் வருடாந்த அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2008 சபரகமுவ மாகாண சபை நிதிய விதிக்கோவை | |
| | (i) 54.1 ஆம் பிரிவு | ரூபா 40,300 பெறுமதியான 2 கையடக்கத்தொலைபேசிகள் காணாமற் போனமை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 261.2.2 ஆம் பிரிவு | 03 அமைச்சு். திணைக்களங்களுக்கு உரித்தாக 2 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 247,827 கூட்டுத்தொகையான துணைக் கட்டுநிதிகள் தாமதமாகி தீர்க்கப்பட்டிருந்ததுடன் 17 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 271,382 கூட்டுத்தொகையான துணைக்கட்டுநிதிகள் உரிய செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாது கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. |

(iii) 471.1 ஆம் பிரிவு — பிரதான அமைச்சர் மற்றும் மக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 37,230 பெறுமதியான 03 கையடக்கத் தொலைபேசிகள் வரிப் பதிவேட்டுப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 476 ஆம் பிரிவு — கேகாலை மாவட்டத்திற்கு உரித்தான 327 பாடசாலைகளின் 2007, 2008 மற்றுமு் 2009 ஆம் ஆண்டுகளின் போது பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 சனவரி 04, 2006 மார்ச் 18 மற்றும் 2007 நவம்பர் 01 ஆம் திகதிய சீஎஸ்ஏ∴பீ1∴40 ஆம் இலக்க இலங்கை சனாதிபதி காரியாலயச் செலவின முகாமைத்துவச் சுற்றறிக்கை — சுகாதார, தேசிய மருத்துவம் மற்றுமு் மகளிர் விவகார அமைச்சின் அமைச்சருக்கு எரிபொருளுக்காக ரூபா 312,480 தொகையும் காணி, மாகாண நீர்ப்பாசன, கமநல, விலங்கின உற்பத்தி மற்றுமு் விலங்கின சுகாதார, சுற்றாடல் நடவடிக்கைகள் மற்றும் மீன்பிடி அமைச்சின் அமைச்சருக்கு எரிபொருளுக்காக ரூபா 289,440 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2007 திசெம்பர் 18 ஆம் திகதிய பீஎப்∴427 ஆம் இலக்க மற்றும் 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய பீஎப்/437 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கை — 5 வாகனங்கள் இலங்கை காப்புறுதி மற்றும் சனசக்தி காப்புறுதிக் கம்பனியில் காப்புறுதி செய்யப்படுவதற்காக ரூபா 388,989 செலவிடப்பட்டிருந்தது.

(எ) அரச பாதீட்டுத் திணைக்களத்தின் 2000 யூன் 27 ஆம் திகதிய பீடீ∴பீஈ∴3∴2000 ஆம் — மிகைப் பணம் முதலீடு செய்யப்படுகையில் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,191,011 தொகை

| | | |
|---|---|---|
| | இலக்கச் சுற்றறிக்கை | நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஏ) | கொள்வனவு நடைமுறை வழிகாட்டி | |
| | (i) 3.4.3 (ஈ) பிரிவு | ரூபா 91,557,930 பெறுமதியான விளையாட்டு உடைகளைக் கொள்வனவு செய்கையில் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் இருந்து விலைக் கோரல்கள் கோரப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 3.6.1 (அ) மற்றும் (ஈ) பிரிவு | முறையற்ற விதத்தில் பாதுகாப்பு சேவை வழங்கல் பெறுவனவு ஒரே நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்தமை. |
| (ஐ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 மற்றும் 105 | 1991 முதல் 2004 வரை ஏற்பட்டிருந்த 150 நட்டங்களும் இழப்புகளும் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | 2009 மார்ச் 12 ஆம் திகதிய எப்சீ/எம்ஈ/ஏஎப்என்/2009 ஆம் இலக்க நிதி ஆணைக்குழுத் தலைவரின் கடிதம் | அமுலாக்கப்படுவதற்கு எதிர்பார்த்த வேலைப் பட்டியல் பிரதான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டு 2009 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் நிதி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கையில் ரூபா 57,586,590 கூட்டுத்தொகையான 110 அபிவிருத்தி வேலை விடயங்கள் குறித்த தினத்தின் பின்னர் பிரதான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 83,047,438 ஆக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 369,827,314 ஆக இருந்தது.

### 2.1 வருமானமும் செலவினமும்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வருமான, செலவினப் பொழிப்பு வருமாறு.

**வருமானம்**

| | 2009 | | | 2008 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப் பட்டது | உள்ளபடி யானது | வேறுபாடு | பாதீடு செய்யப் பட்டது | உள்ளபடி யானது | வேறுபாடு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம்** | | | | | | |
| வரி வருமானம் | 1,465,400,000 | 1,146,644,488 | 318,755,512 | 833,560,000 | 1,012,847,196 | 179,287,196 |
| வரிஅல்லாத **வருமானம்** | 313,600,000 | 273,053,142 | 40,546,858 | 217,170,000 | 250,020,396 | 32,850,396 |
| அரசாங்க மானியம் | 12,011,491,184 | 10,193,813,607 | 1,817,677,577 | 11,643,249,000 | 9,603,761,030 | (2,039,487,970) |
| வேறு(வெளிநாட்டு உதவி) | - | 197,924,953 | (197,924,953) | 200,000,000 | 227,103,250 | 27,103,250 |
| மொத்தம் | 13,790,491,184 | 11,811,436,190 | 1,979,054,994 | 12,893,979,000 | 11,093,731,872 | 1,800,247,128 |

## செலவினம்

| மீண்டுவருஞ் செலவினம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆளணி | | | | | | |
| வேதனம் | 8,624,003,000 | 8,233,926,088 | 390,076,912 | 8,384,840,230 | 7,769,386,108 | 615,454,122 |
| ஏனையவை | 2,047,817,000 | 1,737,906,906 | 309,910,094 | 1,742,408,770 | 1,461,840,028 | 280,568,742 |
| உப மொத்தம் | 10,671,820,000 | 9,971,832,994 | 699,987,006 | 10,127,249,000 | 9,231,226,136 | 896,022,864 |
| மூலதனச் செலவினம் | 2,674,339,000 | 1,756,555,758 | 917,783,242 | 2,622,000,000 | 1,492,678,423 | 1,129,321,581 |
| மொத்தம் | 13,346,159,000 | 11,728,388,752 | 1,617,770,248 | 12,749,249,000 | 10,723,904,559 | 1,025,344,445 |

மீளாய்வாண்டினது மொத்தச் செலவினம் ரூபா 11,728,388,752 ஆக இருந்தது. அதில் 85% மீண்டுவருஞ் செலவினம் ஆக இருந்ததுடன் 15% மூலதனச் செலவினமாகும்.

### 2.2 மூலதன நிர்வாகம்

(அ) கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடந்த 03 ஆண்டுகளின் அவ் ஒவ்வொரு ஆண்டிற்குமான நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும். (மாகாண சபைகளின் சகல வருமானத் தலைப்புகளும்).

**திசெம்பர் 31 இல் உள்ளவாறானது**

| | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வரி வருமானம் | 51,653,107 | 47,106,845 | 69,021,887 |
| வரியல்லாத வருமானம் | 3,392,773 | 3,453,429 | 2,712,540 |
| | 55,045,880 | 50,560,274 | 71,734,427 |

(ஆ) 2003 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை 24 உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பாகப் பெறப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 64,947,451 உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1990 இன் 06 ஆம் இலக்க சபரகமுவ மாகாண நிதிக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் எதேனும் புரள்வு வரியினைச் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு செய்யப்படாத வரிக்கு மேலதிகமாக தண்டப் பணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுகளின் போது 07 கோவைகள் தொடர்பாக ரூபா 337,379 தொகையான தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 1,295,184 கூட்டுத்தொகையான நிலுவை வரி மற்றும் தண்டப்பணத்திற்கு உரித்தான 19 வளக்குகள் 2010 பெப்ரவரி மாதமளவிலும் தீர்க்கப்படாதிருந்தது.

(உ) கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறு மாகாண வருமானத் திணைக்களத்தில் நிலவிய வரிக் கோவைகளின் எண்ணிக்கை 7,693 ஆனதுடன் நிரந்தரமாக ஆய்விற்கு உட்படுத்தப்பட்டிராததன் விளைவாக தொழில் முயற்சியை மூடிய காரணத்தினால் வரி அறவிடப்படுவதற்கு முடியாது போன கோவைகளின் எண்ணிக்கை 2045 ஆனதுடன் அக் கோவைகள் தொடர்பாக முறையான நடவடிக்கை பின்பற்றப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 1990 இன் 06 ஆம் இலக்க சபரகமுவ மாகாண நிதிக் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் எதேனும் ஓர் காலாண்டிற்கு உரித்தான புரள்வு வரி அக் காலாண்டு முடிவுற்றதன் பின்னர் எழும் மாதத்தின் 15 ஆம் நாளுக்கு பிந்தாத வகையில் செலுத்தப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக 08 கோவைகளுக்கு உரித்தாக 1996 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) கேகாலை மாவட்டத்தின் 7 பிரதேச செயலகங்களினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 6.809 ஹெக்டேயர் காணிக்காக 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட குத்தகைத் தொகை ரூபா 13,950,655 ஆகும்.

## 2.3. அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டிற்கு மிகையான செலவினம்

இலங்கை அரசாங்க நிதிப் பிரமாணம் 69 மற்றும் சப்ரகமுவ மாகாண சபை நிதிவிதி 33 என்பவற்றில் காணப்படும் விதப்புரைகளுக்கு முரணாக முறையான அதிகாரமின்றி நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள், செலவின விடயங்கள் (1001 – 1003 – தனியாள் சம்பளங்கள் தவிர்ந்த) என்பவற்றில் மாகாண சபைகளினால் நிர்ணயிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு மிகையாக ரூபா 38,068,968 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.4 முற்பணக் கணக்குகளின் எல்லைகளைக் கடைப்பிடிக்காமை

இலங்கைக் குடியரசு நிதிப் பிரமாணம் 503 மற்றும் சப்ரகமுவ மாகாண சபை நிதி விதி 367 என்பவற்றில் விதிக்கப்பட்டவற்றிற்கு முரணாக 01 முற்பணக் கணக்கு விடயத்தின் செலவின உச்ச எல்லை ரூபா 43,291 இனாலும் 04 விடயங்களின் வரவு மீதியின் உச்ச எல்லை ரூபா 5,742,404 இனாலும் அதிகரித்து இருந்ததுடன், 07 விடயங்களின் பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 9,923,671 இனால் குறைந்தும் காணப்பட்டது.

## 2.5 செயற்பாட்டு நட்டம்

3 வணிக முற்பணக் கணக்குகளுக்கு கடந்த 3 ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக செயற்பாட்டு நட்டம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நட்டம் ரூபா 28,428,851 ஆகக் காணப்பட்டது. நிதிப் பிரமாணம் 513 இன் பிரகாரம் மேற்குறித்த செயற்பாட்டு நட்டத்தை ஈடுசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் முற்பணக் கணக்கை நட்டத்தில் கொண்டு நடாத்துவதற்கு சமூக மற்றும் பொருளாதார நியாயத்தன்மை தொடர்பாக முகாமைத்துவத்தினால் கவனம் கோரப்பட்டிருக்கவில்லை.

## 2.6. மனிதவள முகாமைத்துவம்

### 2.6.1. அங்கீகரிக்கப்பட்டதும் உள்ளபடியானதுமான ஊழியர் எண்ணிக்கை

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சப்ரகமுவ மாகாண சபையின் அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் வருமாறு.

(அ) மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவகங்கள்

| | **அங்கீகரிக்கப்பட்டது** | **உள்ளபடியானது** |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 952 | 756 |
| உதவியாளர்கள் | 3428 | 2571 |
| சிற்றூழியர்கள் | 2126 | 1676 |
| வேறு(அமைய,தற்காலிக) | 38 | 73 |
| உப மொத்தம் | 6544 | 5076 |

(ஆ) பாடசாலைப் பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| அதிபர்கள் | 975 | 638 |
| ஆசிரியர்கள் | 17256 | 17182 |
| சிற்றூழியர்கள் | 873 | 443 |
| ஏனையவர்கள் | 55 | 180 |
| | 19159 | 18443 |

(i) இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று அவசியமான ஏனைய தகமைகளைப் பூர்த்தி செய்த 07 உத்தியோகத்தர்கள் இருக்கையில் கடமை மேவுகைக்காக நியமிக்கப்பட்டிருந்த ஆசிரியர் சேவையிலலும் அதிபர் சேவையிலும் 3 உத்தியோகத்தர்கள் அம்பிலிப்பிட்டிய, கொடக்கவெல மற்றும் கொலொன்ன வலயக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ii) 3 – 5 ஆம் ஆண்டிற்கான ஆங்கிலப்பாடத்திற்காக 72 பாடசாலைகளில் ஒரு ஆசிரியரேனும் இல்லாததுடன் 03 பாடசாலைகளில் 03 ஆசிரியர் பற்றாக்குறைகளும் 6 – 11 ஆம் ஆண்டிற்கான ஆங்கிலப்பாடத்திற்காக 31 பாடசாலைகளில் 31 ஆசிரியப் பற்றாக்குறைகளும் 11 பாடசாலைகளில் 14 ஆசிரிய மிகைகளும் நிலவின.

(iii) 2007 திசெம்பர் 13 ஆம் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சுச் சுற்றறிக்கை மற்றும் இலங்கை ஆசியர்கள் சேவைக் குறிப்பின் பிரகாரம் நிலையான குழு ஒன்றினால் குறிப்பிடப்படும் ஓர் பாடசாலை அல்லது வசதிப் பாடசாலை வகைக்குரிய ஓர் பாடசாலையில் கடமை புரியக் கூடிய ஆகக் கூடிய காலம் 8 ஆண்டுகளான போதிலும், இதற்கு முரணாக நிவித்திகல வலயத்தில் 142 ஆசிரியர்கள் உரிய காலப்பகுதிக்கு மேலாக 09 முதல் 27 ஆண்டு வரையான காலப்பகுதியும் பலாங்கொடை வலயத்தில் 673 ஆசிரியர்களும் உரிய காலப்பகுதிக்கு மேலாக 09 முதல் 30 ஆண்டு வரையான காலப்பகுதியும் ஒரே பாடசாலையில் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன் கணக்காய்வுத் தினமான 209 திசெம்பர் 04 ஆம் திகதி வரை அவர்களை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.7 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.7.1 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்

கீழே விபரிக்கப்பட்டவாறு பௌதீக வளங்கள் விளைவற்ற நிலையிலும் குறைவான பயன்பாட்டுடனும் நிலவியதாக தெரிவுக் கணக்காய்வின் போது

அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் தன்மை | எண்ணிக்கை / வகை அளவு | பெறுமதி | பயன்படுத்தாது காணப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ஆண்டு |
| (அ) | கட்டிடம் | 06 | 8,514,385 | 03 |
| (ஆ) | வாகனம் | 09 | 33,100,000 | 03 |
| (இ) | இயந்திர உபகரணம் | 39 | காண்பிக்க முடியாது | 03 |
| (ஈ) | காரியாலய உபகரணம் | 503 | 9,434,385 | 03 |
| (உ) | ஏனையவை | 212 | 111,877 | 03 |

### 2.7.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் 02 மாகாண சபை அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மீளாய்வாண்டு தொடர்பாக பொருள் மெய்மையாய்வினை நடாத்தியிருக்கவில்லை.

### 2.7.3 பெறவேண்டிய கணக்குகள்

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 19,367,275 ஆனதுடன் 01 ஆண்டு காலத்திற்கு மேலாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,260,143 ஆகக் காணப்பட்டது.

### 2.7.4 தீர்கப்படாத முற்பணங்கள்

2009 திசெமபர் 31 இல் உள்ளவாறு தீர்கப்பட்டிராத முற்பணங்களின் பெறுமதி ரூபா 19,075,389 ஆனதுடன் 1 வருட காலம் கடந்திருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 14,389,941 ஆகும்.

### 2.7.5 அறவிடப்பட வேண்டிய ஊழியர்கடன்

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக இருந்த ஊழியர் கடன் முற்பண மிதிகளின் கூட்டுத்தொகை ரூபா 99,703,751 ஆனதுடன், 1 வருடகாலத்திற்கு மேலாக அறவிட வேண்டியதாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,926,984 ஆகக் காணப்பட்டது.

### 2.8 வாகனப் பயன்பாடு

2006 சனவரி 04, 2006 ஒக்டோபர் 23, 21007 நவம்பர் 19 ஆம் திகதிய இலங்கை சனாதிபதியின் சுற்றறிக்கை மற்றும் 2009 செப்தெம்பர் 02 ஆம் திகதிய நிதி திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சபரகமுவ மாகாண பிரதான செயலாளருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் பிரகாரம், பிரதான அமைச்சருக்கு பாதுகாப்பு வண்டி உள்ளடங்கலாக 03 வாகனங்களுக்கும் சாரதி பதவிகள் 03 இற்காகவும் மாதம் ஒன்றிற்கு பயன்படுத்தப்படக் கூடிய எரிபொருள் அளவு 1700 லீற்றர் (டீசல்) களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பிரதான அமைச்சருக்கு உரித்தான அச் சகல செலவினங்களும் பிரதான அமைச்சின் செலவினத் தலைப்பின் மூலம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பொறுப்பில் நிலவிய 63-4247 ஆம் இலக்க வான் 2008 மே 05 ஆம் திகதி முதல் பிரதான அமைச்சரின் செயற்பாட்டிற்குப் பதிலாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்நாள் முதல் 2009 சனவரி 20 வரையான காலப்பகுதிக்காக எரிபொருள் மற்றும் டயர் பயன்பாட்டிற்காக ரூபா 334,367 தொகை மாகாண கல்வித்திணைக்களத்திற்கு செலவினத்தலைப்பின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. அவ் வாகனத்திற்கு உரித்தான ஓட்ட அட்டவணைகள் 2009 சனவரி 20 ஆம் திகதியின் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.9 இணங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்

கணக்காய்வு தெரிவுச் செவ்வை மற்றும் நிறுவனத்தில் பேணப்பட்ட தகவல்கள் என்பவற்றிற்கமைய ரூபா 263,021 பெறுமதியுடைய நட்டங்களும் சேதங்களும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

## 2.10 வெளிப்படையாக மோசடியான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அம்பிலிப்பிடிய ஆசிரிய மத்தியநிலையத்தில் நடாத்தப்பட்ட தங்குமிடப்பயிற்சிகள் 4 இற்காக அந் நிலையத்தில் நிலவிய வரவுப் பதிவேட்டின் பிரகாரம் கலந்து கொண்ட எண்ணிக்கையிலும் பார்க்க கூடிய பங்கேற்பாளர்களின் கூட்டுத்தொகை ரூபா 24,200 தொகையான மேலதிகக் கொடுப்பனவாகக் காணப்பட்டது.

(ஆ) 2009 சனவரி முதல் ஒக்டோபர் 30 வரையான காலப்பகுதியின் போது வாகனத்திற்கு எரிபொருள் இடுவதற்காக ரூபா 173,038 செலவிடப்பட்டிருந்ததுடன், தெரிவாக சனவரி, ஏப்ரல் மற்றும் யூலை மாதங்களின் போது ரூபா 75,886 கூட்டுத்தொகையான எரிபொருள் அட்டவணைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 22,108 தொகையான 311.16 எரிபொருள் லீற்றர்கள்ஓட்ட அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டிராமையால் அவ் எரிபொருள் வாகனாத்திற்கு இடப்படாது போலியாக எரிபொருட் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கே.எச்.3881 மற்றும் ஜே.கே. 2044 இரு வாகனங்கள் மாத்திரம் மாகாண விவசாய அமைச்சரினால் பயன்படுத்தப்பட்டு வருகையில் அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளரினால் பயன்படுத்தப்படும் 32-4179 வாகனங்கள் பாதுகாப்பு வண்டியாக பயன்படுத்தப்படுவதாகக் காண்பிக்கப்பட்டு 2009 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 428,100 தொகையான எரிபொருட் கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தெல்கொட எலவல்ல பாலம் நேரடி உழைப்பின் அடிப்படையில் நிர்மாணிப்பிற்காக ரூபா 89,581 தொகையான செலவினம்

மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பின்னர் இது ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதற்காக கேள்வி கோரப்பட்டிருந்த காரணத்தினால் மேற்குறித்த தொகை சிக்கனமற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) பங்கேற்பாளர்களுக்காக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருக்கையில் 12 இருப்புக்களுக்காக காலை ஆகாரம் வழங்கப்படுவதற்காக ரூபா 121,025 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கின உற்பத்தி மற்றும் விலங்கின சுகாதார, சுற்றாடல் நடவடிக்கைகள் மற்றும் மீன்பிடி அமைச்சின் அமைச்சருக்காக சபரகமுவ மாகாண சபையின், சகல இயந்திர உபகரணங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் 46 இனை உள்ளடக்கிய முழுமையான காரியாலயம் இரத்தினபுரியில் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கிய போதிலும் கேகாலை உப அலுவலகம் செயற்படுத்தப்பட்டமைக்காக ரூபா 1,382,714 செலவிடப்பட்டமையால் அவ் வாண்டிலேயே இயந்திர உபகரணங்கள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) 2008 பெப்ரவரி 12 ஆம் திகதிய சபரகமுவ மாகாண சபை விளையாட்டு இளைஞர் விவகார, மகளிர், மீன்பிடி, கிராமிய கைத்தொழில், கிராம அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சின் கடிதத்தின் மூலம் புதிய நகர உள்ளக விளையாட்டரங்கில் உடை மாற்றும் பகுதி மற்றும் வாகனத் தரிப்பிட நிர்மாண வேலைகளை இடைநிறுத்துவதற்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலில் வாகனத் தரிப்பிட நிர்மாண வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அத் திகதி வரை அந் நிர்மாணிப்பிற்காக ரூபா 114,137 தொகையான முற்பணத் தொகையும் ரூபா 14,303 தொகையான பங்கு முதலும் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.12 போதிய அதிகாரத்தினால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண வருமானத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவி அல்லாத சுகாதார சேவையாளர் பதவிக்காக 2001 ஆம் ஆண்டு

முதல் ஒரே ஊழியர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு அவர் நிரந்தரமாக்கப்படுவதற்காக 2005 ஒக்டோபர் 07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைத்திணைக்களத்தினால் கோரல் விடுக்கப்பட்டிரந்ததுடன் 2005 ஒக்டொபர் 18 ஆம் திகதிய டிஎம்எஸ்/ பீசீ மற்றும் எல் ஜீ/6/(iv) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் அக்கோரிக்கையை நிராகரித்து அச் சேவை தனியார் துறையினரிடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படாது அந் நபரே தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 2009 திசெம்பர் வரை ரூபா 420,293 கூட்டுத்தொகையான படிப்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) கல்வித் திணைக்களத்தின் நிரந்தர சாரதி ஒருவர் 2008 ஒக்டோபர் முதல் 2009 மே வரை பிரதான அமைச்சருக்கு விடுவித்திருந்ததுடன் ரூபா 137,840 கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2009 யூன் மாதம் முதல் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட சாரதிக்கு அந்நாள் முதல் கணக்காய்வுத் தினமாகிய 2009 ஒக்டோபர் 30 வரை ரூபா 84,850 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 2006 ஜனவரி 04 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க மேன்மை தங்கிய ஜனாதிபதி சுற்றறிக்கையின் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான அமைச்சருக்கு 2 காரியாலயத் தொலைபேசிகள் மாத்திரமே உரித்தான போதிலும் 3 தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் தொலைபேசிச் செலவினங்கள் ரூபா 35,315 மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்ததுடன் 2 வீட்டுத் தெலைபேசிகளும் கையடக்கத் தொலைபேசிகளுக்குமாக மாதாந்த எல்லை முறையே ரூபா 10,000 தொகையும் ரூபா 4,000 தொகையுமான போதிலும் உரிய எல்லைக்கு மேலாக 2009 ஆம் ஆண்டின் போதும் முறையே ரூபா 434,953 தொகையும் ரூபா 171,400 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2005 மே மாதம் 16 ஆம் திகதி பிரதான செயலாளரினால் உதவித் தயாலகத்திற்கு மின்கட்டணமாக மாதம் ஒன்றிற்கு ரூபா 1,200 அறவிடப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் பிரதித் தபாலகம் (நிமாலி முகவரகம்) உடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் ஒரு வருடத்திற்கு ரூபா 1,200 தொகையான பணமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2007 மே 30 ஆம் திகதி முதல் 2009 மே 30 வரையான காலப்பகுதிக்காக ரூபா 33,000 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைச் சுற்றறிக்கை இல. நிதி 01/2001 இன் கீழ் மாகாண சபை அமைச்சர் ஒருவருக்கு கணனி உள்ளடங்கலாக காரியாலய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 250,000 தொகையான ஆகக் கூடிய எல்லைக்கு உள்ளடங்கலாக கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் 2008 ஒக்டோபர் ஒக்டோபர் 08 ஆம் திகதிய 2008 ∴59 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அதன் ஆகக் கூடிய கடன் எல்லை ரூபா 500,000 வரை மேலதிகக் கடன் தொகை பெறப்பட்டிருக்கையில் மாகாண சபைப் பணத்தில் இருந்து 44 அமைச்சர்களுக்காக ரூபா 5,236,000 பெறுமதியான 44 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) 2006 சனவரி 04 ஆம் திகதிய பீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க தேசிய செலவின முகாமைத்துவம் தொடர்பாக சனாதிபதியினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபைத் தலைவரின் மாதாந்த ஒருங்கிணைந்த வதிவிட தொலைபேசி எல்லை ரூபா 17,000 ஆன போதிலும் 2009 யூன் 17 ஆம் திகதிய ஆளுனர் செயலாளரின் 10/43/73(ii) ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் ஒருங்கிணைந்த மாதாந்த வதிவிட தொலைபேசிச் செலவின எல்லை ரூபா 40,000 வரை திருத்தப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த கடிதத்தின் பிரகாரம், 2009 யூலை 01 ஆம் திகதி முதல் மாதாந்த வதிவிட

தொலைபேசிக்காக தலைவருக்கும் உப தலைவருக்கும் முறையே ரூபா 40,000 தொகையும் ரூபா 30,000 தொகையுமான படிப்பணம் செலுத்தப்படுவதுடன் 2009 திசெம்பர் வரை தலைவரினதும் உப தலைவரினதும் முறையே ரூபா 79,035 தொகையும் ரூபா 12,951 தொகையுமான காரியாலய தொலைபேசிச் செலவினம் சபைச் செயலாளர் காரியாலயத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பலாங்கொடை, வரகாப்பொல மற்றும் கஹாவத்த ஆதார வைத்தியசாலைகளுக்காக 2009/2010 ஆம் ஆண்டிற்காக சுத்திகரிப்பு நடவடிக்கைகள் தனியார் தரப்பினர்களுக்கு கையளிக்கப்படுவதற்கான கொள்வனவு மதிப்பீட்டின் போது தொழில் திணைக்களத்தின் சட்டங்கள், விதிகள் மற்றும் 2008 யூலை முதல் செயற்படுத்தப்பட வேண்டிய திருத்தப்பட்ட நிர்வாகச் சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஆகக் குறைந்த சம்பளத்தைக் கணிப்பிடப்படுவதற்குப் பதிலாக மேலதிக நேரம் உள்ளடங்கலாக ஆகக் கூடிய சம்பளத்தைக் கருத்திற்கொண்டமையால் ஆகக் குறைந்த விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கொள்வனவுக் கட்டளைகள் நிராகரிக்கப்பட்டு இதனை விடக் கூடிய வேறு கொள்வனவுகள் கையளிக்கப்பட்டிருந்தமையின் காரணமாக சுகாதாரத் திணைக்களத்திற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 250,570 தொகை மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) சபரகமுவ மாகாண சுகாதாரத் திணைக்களத்திற்கு உரித்தான 02 காரியாலயங்களும் 11 வைத்தியசாலைகளின் பாதுகாப்புச் சேவை நடவடிக்கைகள் தனியார் துறையினருக்கு கையளிக்கப்படுவதற்காக கொள்வனவுகள் மதிப்பிடப்படுகையில் தொழிற் திணைக்களத்தின் சட்டங்கள், விதிகள் மற்றும் 2008 யூலை முதல் செயற்படுத்தப்பட வேண்டிய திருத்தப்பட்ட நிர்வாகச் சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஆகக் குறைந்த சம்பளத்தைக் கணிப்பிடப்படுவதற்குப் பதிலாக மேலதிக நேரம் உள்ளடங்கலாக ஆகக் கூடிய சம்பளத்தைக் கருத்திற்கொண்டமையால் ஆகக் குறைந்த விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கொள்வனவுக் கட்டளைகள் நிராகரிக்கப்பட்டு இதனை விடக்கூடிய வேறு கொள்வனவுகள் கையளிக்கப்பட்டிருந்தமையின் காரணமாக சுகாதாரத் திணைக்களத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூபா 2,381,616 தொகை மேலதிகக் கொடுப்பனவு

மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டின் பொது கொள்வனவுகள் வழங்கப்பட்ட நிறுவகங்கள் தொடர்பாக வைத்தியசாலை அதிகாரிகளினால் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு முறைப்பாடிடப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம்ஆண்டின் பொதும் அந் நிறுவகம் வேறாக கொள்வனவுகளை வழங்கியிருந்தன. 2009 ஆம் ஆண்டின் போதும் குற்றச்சாட்டுகள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களினால் எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ''பனசோனிக் கேஎக்ஸ் எப்'' 937 வகையான 08 பக்ஸ் இயந்திரங்கள் ஒன்று ரூபா 15,900 தொகையான பெறுமதிக்கு வரையறுக்கப்பட்ட யுனிவோர்கஸ் நிறுவகத்தினால் கட்டளையிடப்பட்டிருக்கையில் அவ் வகையிலும் பார்க்க ரூபா 2,00 ஆல் விலை குறைவான கேஎக்ஸ் எப்ரீ 983 வகையிலான பக்ஸ் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு கேஎக்ஸ் எப்'' 937 வகையான பக்ஸ் இயந்திரத்திற்கு உரிய விலைகள் வழங்கிய காரணத்தினால் ரூபா 16,000 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) 2003 யூன் 19 ஆம் திகதிய சீஎம்.'.ஏடீ.'.7.'.1.'.7 சுற்றறிக்கையின் பிரகாரம் விடயப் பணிப்பாளர்கள் உள்ள சகல சந்தர்ப்பங்களின் போதும் உரிய அமர்வை நடாத்த வேண்டியமை, ஒருங்கிணைப்பும் செயற்பாடும் அவரால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தாபனவிதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.7 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தருக்கு அவரது நித்திய பதவிக்கு உரித்தான படிப்பணங்கள் மாத்திரமே செலுத்தப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக வேலை மேவும் துணைப் பணிப்பாளர்களுக்கு உரிய படிப்பணமாக ரூபா 116,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் தகமைகள் பூர்த்தி செய்யப்படாத உத்தியோகத்தர்கள் உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கு வேலை மேவுகை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். VII ஆம் அத்தியாயத்தின் 12.7 ஆம் பிரிவின் பிரகாரம் படிப்பணம் செலுத்தப்படுகையில் நிரந்தரப் பதவிக்கு உரித்தான

படிப்பணம் மாத்திரம் செலுத்தப்படக் கூடிய போதிலும் இதற்கு முரணாக உதவிப் பணிப்பாளர் பதவிக்கு உரித்தான ரூபா 2,400 தொகையான மாற்றுப் போக்குவரத்து செலுத்தப்பட்டிருந்தமையால் 2009 சனவரி முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 168,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) மாகாண ஆயுர்வேத ஆணையாளர் காரியாலய சுகாதார சேவையை பேணும் நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவகம் ஒன்றுடன் 2009 யூன் 26 முதல் 2009 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக மாத்திரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கையில் 2009 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2009 யூன் 26 வரையான காலப்பகுதிக்காக அங்கீகாரம் இன்றி ரூபா 299,511 தொகை அந் நிறுவகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஒ) கமத்தொழில் திணைக்களத்தின் கப் வண்டிகள் இரண்டிற்காக மேலதிக உதிரிப்பாகங்கள் பயன்படுத்தப்படுவதற்காக ரூபா 311,746 தொகை செலவிடப்பட்டிருந்த பொதிலும் அகற்றப்பட்ட பகுதிகள் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) நிதி விதிகள் 85.3 இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படுகையில் உரிய விகிதங்கள் நியாயமானதும் தீர்க்கமானவையாகவும் உள்ளனவா என திருப்தி கொள்ளக் கூடிய போதிலும் ஆகஸ்ட் மாதம் முதல் டீசல் வாகனப் பயன்பாட்டிற்கு இயலுமை இருக்கையில் பெற்றல் வாகனத்திற்கு மேலதிக எரிபொருட்கள் பயன்படுத்தப்பட்டமையைக் காண்பித்து 05 மாதங்களுக்காக ரூபா 114,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஔ) 2009 மே மற்றும் யூன் மாதங்களின் பொது கமநல அமைச்சரினால் பயன்படுத்தப்பட்ட ஜே.கே. 2044 பெற்றல் வாகனம் பழுதுபார்க்கப்படுவதற்காக உட்படுத்தப்பட்டிருக்கையில் இதற்குப் பதிலாக பீ.ப்பீ. 6047 டீசல் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. டீசல் வாகனங்களிற்காக மாதாந்தம் டீசல் 400 லீற்றர்கள் மாத்திரம் பெறப்படக் கூடியதாக இருக்கையில் இதற்கு முரணாக அவ் உரிய 400 லீற்றர் டீசல்களுக்கு மேலதிகமாக மே மாதத்தின் போது பணத்தில்

நிலுவையாக ரூபா 25,000 தொகையும் யூன் மற்றும் யூலை மாதங்களுக்காக ரூபா 14,620 பெறப்பட்டமையால் ரூபா 39,620 கூட்டுத்தொகையான பணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(க) ஒப்பந்த உடன்படிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய உசிதமான காரணங்கள் இன்றி ஒப்பந்தக் காலத்தை நீடிக்காவிடின் எரிர்வு கூறப்பட்ட வேலை எதிர்வு கூறப்பட்ட தினத்திலோ அல்லது நீடிக்கப்பட்ட தினத்தில் பூர்த்தி செய்யப்பட்டுக் கையளிக்கப்படுவதற்கு ஒப்பந்தக்காரர் தவறியிருந்தாராயின் அந்நாள் முதல் முடிவுறும் ஒவ்வொரு கிழமைக்கும் உடன்படிக்கையிடப்பட்ட தொகையில் 0.1% படி ரூபா 488,016 கூட்டுத்தொகையான தண்டப்பணம் ஒப்பந்தக்காரர்களினால் அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது இறுதிப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆகஸ்ட் 27 ஆம் திகதிக்குப் பின்னர் அதாவது 2008 செப்தெம்பர் 02 ஆம் திகதி புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2008 நவம்பர் 02 ஆம் திகதியளவில் அது பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படுவதற்கு உடன்படிக்கையிடப்பட்டிருந்ததுடன் ரூபா 981,582 தொகையான மேற்குறித்த இறுதிப் பட்டியல் செலுத்தப்படுகையில் ரூபா 229,125 தொகையான மிகுதி முற்பணத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) 2002 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 11/719/ஈ203/117 ஆம் இலக்க தாபனப் பணிப்பாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக உலக வங்கிக் கடன் உதவித் தொகையின் கீழ் மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதியத்தின் கீழ் 2009 மே மாதம் முதல் நவம்பர் 30 வரை அம்பிலிப்பிட்டிய வலய கல்வி காரியாலயத்தின் கூட்டுத்தொகை ரூபா 421,251 கொடுப்பனவுகள் செய்யப்பட்டு 27 கடமைநிலைய அமர்வுகளுக்காக 2008 யூலை 28 ஆம் திகதிய ஆ.கா./10/7/ஏ/8 ஆம் இலக்க சபரகமுவ ஆளுனர் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமையால் பங்கேற்பாளர்களிற்காகவும் வளப் பங்களிப்பாளர் கொடுப்பனவிற்காக ரூபா 65,800 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.14 செயற்பாட்டு திறமையீனங்கள்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்மதுல்ல நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயத்திற்கு உரித்தான உத்தியோகபூர்வ விடுதி அமைந்துள்ள பகுதியில் அத்துமீறிய சந்தைத் தொகதிகள் சில நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களை அப்புறப்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கஹவத்தை வெல் அந்துரவில் உள்ள தொழிலாளர் உத்தியோகபூர்வ விடுதியில் வெளியாள் ஒருவர் தங்கியிருந்தமை கண்டறியப்பட்டது.

(ஆ) கலவான நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயத்திற்கு உரித்தான தாலபிஹிட்டி எழுதுவினைஞர் விடுதியில் வெளி நபர் ஒருவர் தங்கியிருந்ததுடன் வேவல்கந்துரவில் உள்ள உத்தியோகபூர்வ விடுதி மற்றும் காணி வெளிநபர்களினால் அத்துமீறிக் கைப்பற்றப்பட்டிருந்த போதிலம் இது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பதிவேட்டின் படி இரத்தினபுரி மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் 613 சங்கங்கள் 2010 பெப்ரவரி 05 ஆம் திகதி 2009 ஆம் ஆண்டிற்கு உரித்தான உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட 51 சங்கங்கள் மாத்திரம் காணப்பட்டதுடன் இது மொத்த சங்கங்களின் எண்ணிக்கையின் 8% ஆனதுடன் 2009 ஆம் ஆண்டின் போது கண்காணிப்பிற்கு 19 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் 61 சனச சங்கங்களும் 21 ஏனைய சங்கங்களும் மாத்திரமேயானதுடன் இது மொத்த பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கையின் 16% ஆகக் காணப்பட்டது.

(ஈ) உலக வங்கிக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் மத்தி அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதியத்தின் கீழ் 05 செலவின விடயங்கள் தொடர்பாக 2009 சனவரி முதல் செப்தெம்பர் வரை ரூபா 3,052,123 கூட்டுத்தொகை

செலவில் 56 கடமைநிலைய அமர்வுகளுக்காக 2002 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 11/719/ஈ203/117 ஆம் இலக்க தாபனப் பணிப்பாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக 2008 யூலை 28 ஆம் திகதிய ஆ.கா./10/7/ஏ/8 ஆம் இலக்க சபரகமுவ ஆளுனர் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் பங்கேற்பாளர்களுக்காகவும் வளப் பங்களிப்புக் கொடுப்பனவிற்காக ரூபா 245,600 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) கடமைநிலைய அமர்வுகள் நடாத்தப்படுகையில் எதிர்பார்க்கப்பட்ட பங்கேற்பாளர்களின் அளவில் 40மூ முதல் 78மூ வரை குறைவான பங்கேற்பு காணப்பட்ட 29 சந்தர்ப்பங்களின் போது கடமைநிலைய அமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் எய்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் காரியாலயம், அம்பிலிப்பிட்டிய ஆதார வைத்தியசாலை மற்றும் இரத்தினபுரி சய நோய் வைத்தியசாலையின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் தனியார் துறையினருக்கு கையளிக்கப்படுவதற்கான கொள்வனவு மதிப்பீட்டின் போது ஊழியர்களுக்காக முறையான சேமலாபக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது பிரதான காரணியாக கருதப்பட்டு ஆகக் குறைந்த விலையை வழங்கிய நிறுவகம் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவகங்களினாலும் முறையான சேமலாப நிதியங்கள் செலுத்தப்படாமை உறுதிப்படுத்தப்பட்டமையால் மதிப்பீட்டுச் சபையின் தவறான தீர்மானங்களின் காரணமாக ஒரு வருடத்திற்கு ரூபா 329,489 தொகை மேலதிகமாகச் செலுத்த நேர்ந்தது.

(எ) புலத்கொகுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் 2003 ஆம் 2005 ஆம் ஆண்டுகளின் போது இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்ட ரூபா 148,100 கூட்டுத்தொகையான 2 மின்உற்பத்திச் செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அத் தொகை மீளப் பெற்றுக்கொள்வதற்கு 2010 சனவரி 11 ஆம் திகதியில் உள்ளவாறும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபரகமுவ மாகாண சபையினால் நிச்சயிக்கப்பட்டவாறு கைத்தொழில் அபிவிருத்திக்கு உரித்தான கொள்கைத் தயாரிப்பும் அமுலாக்கமும் கைத்தொழில், வணிக மற்றும் வியாபார நடவடிக்கைகள் மற்றும் ஏனைய செயற்திட்டங்களை ஊக்குவித்தல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்திக்கு உதவுதல் மற்றும் உரிய விடயங்களை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளுக்காக ஸ்தாபிக்கப்பட்ட சபரகமுவ மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்குகள் சமர்ப்பித்தலின் கால எல்லை தொடர்பாக உரிய ஏற்பாடுகள், கட்டளைச்சட்டத்தினூடாக திட்டமிடப்பட்டிருக்கவில்லை. 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக ஒருங்கிணைந்த வருடாந்த இறுதிக் கணக்குகள் (பலவின்ன கொங்கிரீட் களஞ்சியம் உள்ளடங்கலாக) 2010 மார்ச் 01 ஆம் திகதியில் உள்ளவாறும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதிக் கணக்குகளும் 2003 சனவவரி 01 ஆம் திகதி முதல் 2004 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையான 20 மாத காலத்திற்காகவேயாகும்.

(ஐ) 85 ஏக்கர் அளவிலான குருவிட்ட பரடைஸ் கைத்தொழிலகத்தின் காணி நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 12 காணிகள் தொடர்பாக 2009 ஒக்டோபர் 01 ஆம் திகதியில் உள்ளவாறும் ரூபா 2,051,160 கூட்டுத்தொகையான நிலுவைக் குத்தகையை அறவிடுவதற்கோ குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு வேறு உரிய நபர்களை இனங்கண்டு மீளகுத்தகைக்கு வழங்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 15 நிறுவகங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் அக் காணிகள் சட்டரீதியாக அவர்களுக்கு வழங்கப்படுவதற்கோ அல்லது குத்தகைக் கட்டணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) குருவிட்ட பரடைஸ் கைத்தொழிலகத்தின் பல்கொம் இன்டஸ்ரீஸ் இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணி மற்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் அங்கீகாரம் இன்றி இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிக்கு குத்தகைக்கிடப்பட்டிருந்ததுடன் 2000 நவம்பர் 28 ஆம் திகதி வரையிலும் வங்கியினால் பிரசித்த ஏலவிற்பனை மூலம் அக் காணியின் குத்தகை உரிமை விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஓ) குருவிட்ட பிரதேச செயலாளர் பிரிவிற்கு உரித்தான 161, எரத்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் 29 பேர்ச் அரசாங்கக் காணிப் பிரிவுகள் 30 ஆண்டு வரையான நீண்ட கால குத்தகையின் கீழ் வழங்கப்பட்டிருந்த போதிலும் குத்தகை உடன்படிக்கையின் படி குத்தகை வாடகை தொடர்ந்து செலுத்தப்பட வேண்டியதுடன் செலுத்தத்தவறிய சந்தர்ப்பங்களின் போது உடன்படிக்கை தன்னியக்கத்திலேயே இரத்தாகும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 1995 முதல் 2009 வரையான குத்தகை வாடகை மற்றும் தண்டப்பண வட்டிக் கூட்டுத்தொகையான ரூபா 60,235 அறவிடப்பட்டிராததுடன் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு உரிமை மீளப் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) கிரிஅல்ல பிரதேச செயலாளர் பிரிவில் முனசிங்கபுரவில் உள்ள அனுமதிப்பத்திரங்களின் மூலம் கையளிக்கப்பட்டிருந்த காணிகளுக்காக 1997 ஒக்டோபர் 16 ஆம் திகதிய மக்கள் உத்தியோகத்தரின் ஆய்வு அறிக்கையின் மூலம் உரிய காணியில் குடியிருக்கும் இரு குடும்பங்களுக்கும் அவர்கள் அனுபவிக்கும் விதத்திலேயே உரிய காணிகளைப் பகிர்ந்து வழங்க ஏற்றதென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பொறுப்புடைய உத்தியோகத்தரின் தாமதக் கட்டணம் காரணமாக இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பாதிக்கப்பட்டவரால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதில் இருந்து மாகாண காணி ஆணையாளர் ஏற்க வேண்டியதாக இருந்த ரூபா 72,000 தொகையான சட்டத்தரணிக்கான கட்டணம் உரிய உத்தியோகத்தரிடம் இருந்து பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) செயற்திட்ட நிதியங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கொள்வனவுகளுக்கு உரித்தான உள்நாட்டு வரி, வெளிநாட்டு மானியங்களின் கீழ் ஏற்கப்படலாகாத போதிலும் இதற்கு முரணாக சுகாதார அமைச்சு மற்றும் இரத்தினபுரி மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் ரூபா 23,623,966 தொகையான கொள்வனவுகளுக்காக ரூபா 1,303,411 தொகையான வரித் தொகை செயற்திட்ட நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.15 செயலாற்றல்

### 2.15.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காகப் பெறப்பட்ட நிதி மற்றும் அவை செலவிடப்பட்ட விதம் தொடர்பான விபரம் வருமாறு.

| | தோற்றுவாய் | நிதியேற்பாடு | செலவினம் | குறைவான பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | குறித்த நோக்கினடிப்படையிலான நிதியேற்பாடு | 415,639,000 | 311,485,000 | 104,154,000 |
| (ii) | மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி நிதியேற்பாடு | 2,258,700,000 | 1,389,328,607 | 869,371,393 |
| (iii) | திரண்ட நிதியேற்பாடு | 9,337,152,184 | 8,493,000,000 | 844,152,184 |
| (iv) | உலக வங்கி மானியம் | - | 197,924,953 | (197,924,953 ) |

### 2.15.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் முடிவுறா வேலைகளின் கீழ் ரூபா 1,240,026,617 பெறுமதியான 4570 வேலைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபை முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், வேலைத் திட்டங்களது முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றது.

| | | புதிய வேலை | முடிவுறா வேலை | பிரேரிக்கப்பட்டவேலைத் திட்டங்களது மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | முற்றாக முடிவுற்றவை | 2579 | 955 | 3534 |
| (ஆ) | 50% க்கும் குறைவாக முடிவுற்றவை | 200 | 66 | 266 |
| (இ) | 50% க்கு அதிகமாக முடிவுற்றவை | 194 | 62 | 256 |
| (ஈ) | ஆரம்பமாகாதவை | 416 | 45 | 461 |
| (உ) | சர்ச்சைக்குரிய/பிரச்சினைகளை பின்னனியாகக் கொண்டவை | 9 | 24 | 33 |
| | மொத்தம் | 3398 | 1152 | 4550 |

* பிரதான அமைச்சிற்குரிய 20 செயற்திட்டங்களிற்கு உரித்தான முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.16 ஒப்பந்த நிர்வாகம்

### 2.16.1 செயற்திட்டம்/ திட்டங்கள் அமுலாக்கலிலான தாமதம்

பின்வரும் செயற்திட்டங்கள்/ தீர்மானத் திட்டங்கள் அமுலாக்கப்படுகையில் நீண்ட காலதாமதத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

| | செயற்திட்டம்/ திட்டம் | மதிப்பீட்டு கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2009 திசெம்பர் 31 வரை செவிடப்பட்ட தொகை | கைவிடுவதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஹேவாதிவல தலங்பிட்டிய வீதி | 2,341,856 | 2007.09.25 | 610,314 | மாகாண சபையினால் தார் வழங்கப்பட்டிராமை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | பனாவல மானியங்கம வீதி | 6,784,007 | 2007.09.10 | 1,714,885 | ஒப்பந்தக்காரரினால் கைவிடப்பட்டிருந்தது |
| (இ) | சிபொத் நாகஸ்தென்ன வீதி | 3,553.106 | 2007.09.17 | 1,204,546 | ஒப்பந்தக்காரரினால் கைவிடப்பட்டிருந்தது |
| (ஈ) | மடவெல சந்தியில் இருந்து வட்டவல வரை | 4,447,908 | 2007.10.11 | 975,088 | ஒப்பந்தக்காரரினால் கைவிடப்பட்டிருந்தது |

**2.16.2 முற்றாகக் கைவிடப்பட்டிருந்த செயற்திட்டம்/ திட்டங்கள்**

பின்வரும் செயற்திட்டங்கள்/ திட்டங்கள் முற்றாக கைவிடப்பட்டிருந்தன.

| | செயற்திட்டம்/ திட்டம் | மதிப்பீட்டு கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2009 திசெம்பர் 31 வரை செவிடப்பட்ட தொகை | கைவிடுவதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| (அ) | கொலொன்ன தேசிய பாடசாலையின் விவசாய ஆய்வுகூட நிர்மாணக் கைத்தொழில் | 1,725,803 | - | 630,463 | ஒப்பந்தக்காரர் கைவிட்டுச் சென்றுள்ளமை. |
| (ஆ) | உடுமுல்ல ஹிநெடிபான கந்த வீதி | - | 2009 மார்ச் 26 | - | ஒப்பந்தக்காரர் கைவிட்டுச் சென்றுள்ளமை. |
| (இ) | அன்னாசிகல பொலகம வீதி | - | 2010 சனவரி 12 | - | மாகாண சபையினால் தாரிடப்படாமை |
| (ஈ) | தரனியகல பண்டாரவத்த கம்பி பாலம் II ஆம் கட்டம் | - | ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 960,475 | ஒப்பந்தக்காரர் கைவிட்டுச் சென்றுள்ளமை. |

### 2.16.3 நிர்மாணிப்புக்கள்

நிர்மாண வேலைகள் தொடர்பான கள ஆய்வுகளின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறாகும்.

(அ) கப்பெட்டிய மண்டிய வெவகம வீதி மேம்பாட்டுச் செயற்பாட்டின் முதலாம் தாரிடப்பட்டு மூன்று மாதங்கள் கடந்திருந்த போதிலும் இரண்டாம் தடவையாக தாரிடப்பட்டிராமையால் 2009 ஆகஸ்ட் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது வீதியின் பல்வேறு இடங்களில் கிடங்குகள் காணப்பட்டு உடைந்திருந்ததுடன் வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் 2009 மே 30 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் 2009 யூன் 22 ஆம் திகதி 200 லீற்றர் கொண் 15 தார் பீப்பாக்கள் தொழிநுட்ப உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இவற்றில் 04 பீப்பாக்கள் தொழிநுட்ப உத்தியோகத்தரினால் அகற்றப்பட்டு கொண்டுசெல்லப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 11,163,000 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2008 ஒக்டோபர் 20 ஆம் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்த அரனாயக்க வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவும் வாட் தொகுதியும் 2009 பெப்ரவரி 17 ஆம் திகதியில் உள்ளவாறும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது கீழ் மாடியின் முன்னுள்ள சுவர் உள்ளேயும் வெளியிலும் 13 சிறிய வெடிப்புகள் காணக்கூடியதாக இருந்ததுடன் வெளிப்புறச் சுவர் பூச்சிடுவதில் சில பகுதிகளைக் கையால் தொடும் போது பூச்சு களரும் நிலையில் காணப்பட்டது.

(இ) 2008 பெப்ரவரி 26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கிணற்று நிர்மாணிப்பு திருத்த திட்டத்தின் பிரகாரம் புதிய நகர உள்ளக விளையாட்டரங்கின் கிணறு நிர்மாணிக்கப்பட்டிராமையால் இது பயன்பாட்டிற்கு ஏற்றநிலையில் இல்லாதிருந்ததுடன் இதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,758,581 தொகை விளைவற்ற செலவினமாக இருந்தமை 2009 திசெம்பர் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சபரகமுவ மாகாண சபை தாபனத் தலைவர்கள் மற்றும் பிரதம செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடும் நிதிக் கட்டுப்பாடும்

(ஆ) சொத்துக்கள் மற்றும் மனிதவளங்கள்

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்தம்

(உ) செயற்திட்ட அமுலாக்கம்